ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2467/77 - 2025 දෙසැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2025.12.19

*2467/77 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**அறிவித்தல்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1), 14 மற்றும் 20 ஆவது பிரிவினால் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் விதிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் பாராளுமன்றத்தில் வழமைபோன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.

**கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும,**
நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சின் செயலாளர்.

நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01.
2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி.

**பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்**

1. இலங்கைக்கு மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கி, 2025, சனவரி 31 ஆந் திகதிய 2421/44 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2025, மார்ச் மாதம் 20 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென,

2. மோட்டார் வாகன, இறக்குமதிகளுக்கான ஏற்றுமதிச் சோதனைச் சான்றிதழ்களை முன்வைப்பது சம்பந்தமாக, 2025, மார்ச் மாதம் 19 ஆந் திகதிய 2428/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2025, மே மாதம் 22 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென,

3. 2013 ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதிய, 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் 5 ஆம் இலக்க ஒழுங்குவிதிக்கு இணங்காது இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை நிபந்தனைகளுடன் விடுவிப்பு செய்வதற்கு அனுமதி வழங்கி, 2025, ஒற்றோபர் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2459/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், 2025, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென,

EOG 12-0190

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.